**செ. கு. எண்: 205** **நாள் : 27.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 4.12.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், ராயகிரி பகுதியைச் சேர்ந்த திரு. மாடன் என்பவரின் மகன் சிவன்பாண்டியன்; சென்னை, பள்ளிக்கரனை பகுதியைச் சேர்ந்த மருதநாயகம் மற்றும் அவரது மனைவி நிர்மலா புஷ்பம்;

5.12.2015 அன்று செய்யார் வட்டம், திருவத்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. காங்கன் என்பவரின் மகன் சந்தானம்;

6.12.2015 அன்று செய்யார் வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெள்ளை என்பவரின் மகன் அருண்குமார்; காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், செம்மஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராகவன் என்பவரின் மனைவி நளினி;

——ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

5.12.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், முக்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மொட்டை என்பவரின் மகன் கண்ணன்;

6.12.2015 அன்று கெங்கனந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. நன்னி என்பவரின் மகன் சின்னசாமி;

8.12.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், ஆவுடையனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினசாமி என்பவரின் மகன் மாரிச்செல்வன்;

--- ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **9** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**